

சென்னை தெற்கு மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் கழக த.ரமேஷ் தாயார் ஆந்தாயி அவர்கள் உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதை அறிந்து, மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் நலம் விசாரித்து, சிகிச்சை குறித்து கேட்டறிந்தார். இதில் பகுதி கழக பொறுப்பாளர், வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி., கழக மாநில தேர்தல் பணிக்குழு செயலாளர் வேளச்சேரி பெ. மணிமாறன் எம்.சி., வட்டக் கழக செயலாளர் கே.என்.தாமோதரன், த.பார்த்திபன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்..



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி 4 மண்டலம் 23 வது வார்டில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாம் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் முகாமை தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு பல்வேறு சான்றிதழ்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கினார் உடன் ஆவடி மாநகர மேயர் உதயகுமார், மாநகர ஆணையர் சரண்யா, துணை மேயர் சூரியகுமார், மண்டல குழு தலைவர் ஜோதிலட்சுமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ் மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ் பகுதி கழகச் செயலாளர் ஜி.நாராயண பிரசாத், வார்டு கழகச் செயலாளர் ஜெயந்தன் மற்றும் அரசு அலுவலர்கள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### வட கிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னையின்

# மழைநீர் வடிகால் கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் தூர்வாரும் பணிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்து – பார்வையிட்டார்!

சென்னை, ஆக.31-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னையின் மழைநீர் வடிகால் கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் ஓட்டேரி நல்லா கால்வாய், இரயில்வே ஆன்ஸ்லி கால்வாய் கேப்டன் காட்டன் கால்வாய், கொடுங்கையூர் கால்வாய் உள்ளிட்ட தூர்வாரும் பணிகளைத் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வடகிழக்குப் பருவமழையின் போது அதிகமழை பொழிவு ஏற்பட்டாலும், சென்னையில் நீர் தேங்காமல் இருப்பதற்காக தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் நீர்வளத்துறை ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள கால்வாய்களில் ஆழப்படுத்துதல், அகலப்படுத்துதல், கான்கிரீட் சுவருடன் கூடிய மூடு கால்வாய்களை அமைத்தல், மழைநீர் கால்வாய்கள் அமைத்தல், கால்வாய்கள் கடலுடன் சேரும் பகுதிகளில் தூர்வாருதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள உயர் அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டங்கள் மற்றும் கள ஆய்வு பணிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றார்.

இதன் காரணமாக கடந்த ஆண்டுகளில் எதிர்பாராத வகையில் சென்னையில் அதிக அளவு மழைபெய்தபோதும், சில மணி நேரங்களிலேயே வெள்ளநீர் வடிந்து உடனடியாக போக்குவரத்து இயல்பு நிலைக்கு திரும்பியதால் பல்வேறு தரப்பினரிடமிருந்து பாராட்டைப் பெற்றது. தற்பொழுது பிற மாநிலங்களில் மேகவெடிப்பு உள்ளிட்ட பெருமழைப் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குறிப்பாக சென்னையின் பல்வேறு பகுதிகளில் மழை வெள்ள முன்னேற்பாட்டுப் பணிகள் முன்னுரிமை அடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட திரு.வி.க. நகர் மண்டலம், ஓட்டேரி நல்லா கால்வாயில் 65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூர்வாருதல், தடுப்புச்சுவரினை உயர்த்திக் கட்டுதல், சங்கிலி வேலி அமைத்தல் உள்ளிட்ட பணிகளை நேற்று (30.8.2025) தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

தொடர்ந்து, திரு.வி.க. நகர் மண்டலம், இரயில்வே ஆன்ஸ்லி கால்வாயில் 3.27 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், தண்டையார்பேட்டை மண்டலத்தில் வியாசர்பாடி, கேப்டன் காட்டன் கால்வாயில் 6.85 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், கொடுங்கையூர் கால்வாயில் 3.75 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் என மொத்தம் 78.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூர்வாருதல், பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் மிதக்கும் பொருட்களை அகற்றும் பணிகளைத் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

மேலும், நீர்வளத்துறையின் மூலம் 28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எண்ணூர் சிற்றோடை பாலம், கொசஸ்தலை ஆற்றில் சாம்பலை அகற்றுதல் மற்றும் தூர்வாரும் பணி, எண்ணூர் சுரங்கப்பாதை பக்கிங்காம் கால்வாயில் 4.50 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் தூர்வாரும் பணி, அமுல்லவாயல் பாலம், புழல் உபரிநீர் கால்வாயில் 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தூர்வாரும் பணி என மொத்தம் 32.90 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான தூர்வாரும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின் போது, சீரமைப்புப் பணிகளை வடகிழக்குப் பருவமழைக்கு முன்னதாக முடிவடையும் வகையில் விரைவாகவும், தரமாகவும் மேற்கொள்ள வேண்டும் எனவும், பணிகளை தொடர்புடைய உயர் அலுவலர்கள் தொடர் ஆய்வு மேற்கொண்டு குறிப்பிட்ட காலத்தில் முடிவடைவதை உறுதி செய்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஆர்.டி.சேகர் ஜே.ஜே.எபினேசர், எஸ்.சுதர்சனம், கே.பி.சங்கர், துணை மேயர் மு.மகேஷ்குமார், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், நீர்வளத் துறை செயலாளர் ஜெ. ஜெயகாந்தன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், வட்டார துணை ஆணையாளர்கள் எச்.ஆர்.கௌஷிக், கட்டா ரவி தேஜா, நீர்வளத்துறை தலைமைப் பொறியாளர் பொதுப்பணித்திலகம் மற்றும் மண்டலக்குழுத் தலைவர்கள் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நகராட்சி நிருவாகம் – குடிநீர் வழங்கல் துறையில் நேரடி நியமனம் மூலம்

# பணி நியமனம் செய்யப்பட்டுள்ள பணியாளர்களுக்கான அடிப்படை பயிற்சி வகுப்புகள்!

## அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்தார்!

சென்னை, ஆக.31-

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் நேரடி நியமனம் மூலம் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள பணியாளர்களுக்கான அடிப்படை பயிற்சி வகுப்புகளை தொடங்கி வைத்தார்.

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று (30.08.2025) செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூரில் உள்ள தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் நேரடி நியமனம் மூலம் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள பணியாளர்களுக்கான அடிப்படை பயிற்சி வகுப்புகளை தொடங்கி வைத்தார்.

இக்கூட்டத்தில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது:-

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ், செயல்படுகின்ற அலுவலகங்களில் 401 -உதவிப்பொறியாளர்கள், 124 -உதவிப்பொறியாளர்கள்(திட்டமிடல்), 15 -இளநிலைப் பொறியாளர்கள், 189- இளநிலைப் பொறி யாளர்கள் (திட்டமிடல்), 207 தொழில்நுட்ப உதவியாளர்கள், 126-படவரைவாளர்கள், 167- பணி மேற்பார்வையாளர்கள், 354 - பணி ஆய்வர் மற்றும் 431 -துப்புரவு ஆய்வர்கள் என மொத்தம் 2014 பணியாளர்கள் இதுவரை பணியில் சேர்ந்துள்ளனர்.

நேரடி நியமனம் மூலம் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு அடிப்படை பயிற்சிவகுப்புகள்30.08.2025 முதல் 30.09.2025 வரை அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பயிற்சியானது சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் காணொலி காட்சி வாயிலாக தொடங்கிவைக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் 60 சதவீதம் முதல் 70 சதவீதம் நகர்புறங்களில் பொதுமக்கள் வசித்து வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி பல்வேறு தொழில் நிறுவனங்கள் சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, சேலம், திருநெல்வேலி, மற்றும் தூத்துக்குடி மாநகராட்சிக்கு அருகில் உள்ள பகுதிகள் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, கிருஷ்ணகிரி, வேலூர், விழுப்புரம், கடலூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அருகில் செயல்பட தொடங்கியுள்ளன. இதனால் குடிநீர், சாலைகள் வசதி, மழைநீர் வடிகால்கள், மின்வசதி போன்ற அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் பல்வேறு நிலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மற்ற துறைகள் போல் இல்லாமல் நகராட்சி நிருவாகத் துறை என்பது மக்களுடன் நேரடி தொடர்பில் இருக்கும் ஒரு முக்கிய துறையாகும். நகர்ப்புற பகுதிகளில் அனைத்து மக்களுக்கும் அடிப்படை வசதிகள் சிறப்பாக சென்றடையும் வகையில் பணியாளர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும். அடிப்படை கல்வி தகுதிகளில் பல சாதனைகளை புரிந்து இருந்தாலும், நடைமுறையில் பணிகளை மேற்கொள்வதற்கு முறையான பயிற்சிகள் வழங்கினால் மட்டுமே அலுவலர்களின் செயல்பாடுகள் பொது மக்களின் பாராட்டுகளை பெறமுடியும். மேலும், பொதுமக்களோடு நேரடி தொடர்பு கொள்வதன் மூலம் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் பொது மக்களின் தேவைகளை உடனடியாக கண்டறிந்து நடவடிக்கை எடுக்க முடியும். இதனை கருத்தில் கொண்டு அனைத்து நிலை பணியாளர்களும் தங்களது பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

அலுவல் ரீதியான கோப்புகளை எப்படி கையாளுவது, நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் தினசரி மேற்கொள்ளப்படும் அன்றாட பணிகளோடு பொதுமக்களின் தேவைகளை உடனுக்குடன் சரிசெய்வதற்கான வழிவகைகளை மேற்கொள்வது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படும். எனவே ஒரு மாதம் காலம் நடைபெறும் பயிற்சியினை பணியாளர்கள் அனைவரும் முறையாக பயிற்சி பெற்று சிறப்பாக பணியாற்றிட வேண்டும். தங்களுக்கு வழங்கப்படும் பொறுப்புகளை திறம்பட மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்வில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திருமதி.வரலட்சுமி மதுசூதனன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் நிருவாக இயக்குநர் கே.விவேகானந்தன், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழக மேலாண்மை இயக்குநர் ஹனிஷ் சாப்ரா, சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், நகராட்சி நிர்வாக இயக்குநர் பி.மதுசூதன் ரெட்டி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், பேரூராட்சிகளின் இயக்குநர் எம்.பிரதீப் குமார், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் திருமதி. தி.சினேகா மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



உங்களுடன் ஸ்டாலின் என்ற முன்னெடுப்பின் கீழ் திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி எல்லாபுரம் தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட மஞ்சங்காரணை, சூரம்பாக்கம் , கோட்டகுப்பம் , அக்கரப்பாக்கம் , மதுரவாசல் மற்றும் பனையஞ்சேரியில் நடைபெற்ற திட்ட முகாமில் கழக மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் சி.எச்.சேகர் மற்றும் எல்லாபுரம் தெற்கு ஒன்றிய செயலாளர் சக்திவேல் மவட்ட பிரதிநிதி வெங்கடாசலம் ஒன்றிய பிரதிநிதி நீதி செல்வகுமார், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் துளசிராமன், மாவட்ட விவசாய அணி துணை அமைபாளர் நாராயணன், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைபாளர் தினேஷ், ஒன்றிய தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் விஜய், சஞ்சய் , கிளை செயலாளர் வல்லரசு , மற்றும் மாவட்ட,ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டு மக்களுக்கான தேவைகளை மனுக்களாகப் பதிவு செய்து உடனடியாக விண்ணப்பித்தவர்களுக்கு சான்றிதழ்கள் அரசு சார்பில் வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகள் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்பட அனைத்து அரசு துறை அதிகாரிகள் உள்ளனர்.

### திருவல்லிக்கேணி முன்னாள் பகுதிச் செயலாளர்

# க.வே.செழியன் 3-ஆம் ஆண்டு நினைவு நாள் - தூய்மைப் பணியாளர்களுக்கு நல உதவிகள்!

## 3000 பேருக்கு உணவு: க.வே.மோகன் ஏற்பாட்டில் நே.சிற்றரசு வழங்குகிறார்!

*சென்னை, ஆக.31-*

*சென்னை மேற்கு மாவட்டம், திருவல்லிக்கேணி பகுதி கழக முன்னாள் செயலாளரும், முன்னாள் பொதுக்குழு உறுப்பினருமான க.வே.செழியன் அவர்களின் 3-ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி 3,000 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி இன்று (31.8.2025-ஞாயிற்றுக்கிழமை) காலை 11 மணியளவில் பூரம் பிரகாசம் தெரு இராயப்பேட்டையில் நடைபெறுகிறது.*



*நிகழ்ச்சியில் மறைந்த க.வே.செழியன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மரியாதை செலுத்தி தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் 3000 பேருக்கு அறுசுவை உணவை மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தயாநிதி மாறன் எம்.பி., பகுதி கழக செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், வே.கமலா செழியன் எம்.சி. ஆகியோர் வழங்குகின்றனர்.*

*இதில் Dr.அ.சுபேர்கான், வி.பி.பொன்னரசு, ஆர்.என்.துரை, வி.என்.ராஜன், ரவிராஜ்குமார், டாக்டர். அபிஸ்வுல்லா, கே.திருநாவுக்கரசு*

*வழக்கறிஞர் ப.பிரகாஷ், எம்.கே.ஆனந்த், இ.இளம்பாரதி, ஜெ.கதிரேசன், ம.தயாநிதி, எம்.பிரேம்ராஜா, ஆர்.பத்மாவதி, மங்கை ராஜ்குமார், ஐ.சி.எஃப். எம்.சங்கர், லைனர் கே.பிரபு, ஜெ.விஜயகுமார், என்.ரவி, கே.ஜி.செந்தில்குமார், எஸ்.சசிகுமார், எம்.கலில்ரகுமான், ஆர்.ராஜ்குமார், ஆர்.சசிகுமார், வெ.சீனிவாசன்க ஆர்.ஜேந்திரன், எஸ்.விஜயகுமார், எல்.துளசிராமன், ஏ.பி.வேலு, ஆர்.ரஞ்சித்குமார், எல்.பாலு, இ.மாரி, பி.திவ்யா, எஸ்.ரவீந்திரன், ஜி.சேகர், இ.குமரன், ஆர்.சரவணன் (எ)கோபி, ஆர்.பாஸ்கர், கு.வெங்கடேஷ் வழக்கறிஞர் பி.ஏ.மணிகண்டன், வழக்கறிஞர் ஆர்.ராஜேஷ், வழக்கறிஞர் டி.அப்துல் சுபான், க.பாலாஜி, பி.முனுசாமி, டி.லூர்து, ஆர்.கோபு, டி.ஜெயக்குமார் பி.ஏழுமலை, எஸ்.மகேஸ்வரி, ஆர்.நூருல்லா, வி.பாலசுப்பிர மணி, கே.தினேஷ், ஒய்.காதர்பாஷா, டி.பாஸ்கர், கே.புஷ்பராஜ், என்.பாபு, எம்.கதிரவன், கே.ராகுல், ஆர்.பவானி, என்.ஆஜிரா எஸ்.ஜினத், எம்.வாஜிதா, பி.கௌரி, ஆர்.பிரபாக ரன், எம்.ஆமீனாத பசம், வி.வெங்கடேசன், கே.ரங்கராஜன், டி.புருஷோத்த மன், இ.ஆறுமுகம், வி.ராஜேந்திரன், எஸ்.கோவர்தன் 119வது வட்ட கழக முன்னோடிகள் : எஸ்.என்.கபாலிதாசன், வே.மணி, கே.செந்தில் ஆறுமுகம், வி.நந்தன், இக்பால் பாஷா, பிரகாஷ், மஸ்தான், வாஜித், உசேன், ஆட்டோ வேலு உள்ளிட்ட மாநில, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.*

*ஆர்.உதய கணேஷ், எஸ்.சதீஷ்குமார், எச்.நந்தகுமார், டி.சிலம்பர சன், பி.மணி கண்டன், எம்.கருணாகரன், ஆர்.வினோத்குமார், ஆர்.ராஜேஷ், எம்.செல்வராஜ், வி.ருத்தர குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.*

*நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை 119வது வட்டக் கழக செயலாளர் க.வே.மோகன் செய்துள்ளார்.*



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட உத்திரமேரூர் ஒன்றியம் சாலவாக்கம் ஒன்றியம் காஞ்சிபுரம் தெற்கு ஒன்றியம் உத்திரமேரூர் பேரூர் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் தொகுதி பொறுப்பாளர் ராணி ரவிச்சந்திரன் எம்.சி. கலந்து கொண்டு பேசினார் உடன் ஒன்றிய செயலாளர்கள் கெ.ஞானசேகரன், டி.குமார், குமணன், பேரூர் செயலாளர் பாரிவள்ளல், பொதுக்குழு உறுப்பினர் சசிகுமார், உள்ளிட்ட ஒன்றிய பேரூர் நிர்வாகிகள் பாக முகவர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க.வே. செழியன்
### ஆகஸ்ட் 31 (2022)



**தனது இளமைக் காலத்திலேயே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.**

**1975ஆம் ஆண்டு தனது பகுதியில் உதயசூரியன் நற்பணி மன்றம் தொடங்கி, பின்னர் பெரியார் எழுச்சி மன்ற காப்பாளராகவும், பின்னர் வட்டக் கழகத்தில் பகுதி பிரதிநிதியாகவும் திருவல்லிக்கேணி பகுதி துணைச் செயலாளராகவும், பொறுப்பாளராகவும் பொறுப்பு வகித்து, அதனைத் தொடர்ந்து பகுதிக் கழகச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேலாக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றிவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**“திருவல்லிக்கேணியில் கழகம் வளர்த்த உண்மைத் தொடர்” என தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**